## ஜூன் - 23

**"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும், உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்."**

**- மத் 13 : 23.**

முப்பதாகவும், அறுபதாகவும், நூறாகவும் கொடுக்கிற கனித்திறன் அல்லது பத்து ராத்தல், ஐந்து ராத்தல் திரவியம் இவைகளின் வித்தியாசமான கனித்திரளின் அளவுகள், கிருபையில் எத்தனங்களை உபயோகிப்பதில் உண்மையில்லாதவர்களாய் இருக்கிறதைக் குறிக்காமல், மேற்கொள்ளுவதற்காகவுள்ள இடையூறுகள் முதலியவற்றின் வித்தியாசங்களைக் குறிக்கின்றன. சிலர் பலன்களை பெற நீண்ட காலமாகவும், ஊக்கமாகவும் உழைக்கலாம். அப்பொழுது அவர்களைவிட அதிகமாக உறுதியான நோக்கமுள்ள சித்தத்தையும், இடைவிடாமல் செய்கிற மற்றவர்களிடத்திலுள்ள அதே பிரயத்தனம் பெரிய காரியங்களை நிறைவேற்றும். தவறுதல்கள், சிற்சில சமயங்களில் ஏற்படுகிற பின் வாங்குதல் ஆகிய இவைகளிலிருந்து சிலர், முன்னிருந்த நிலைக்குத் திரும்பி, அவர்கள் மன்னிக்கப்பட்டு, தாராளமனமுடன் தேவனுடைய தயவில் முன்னிருந்த நிலையில் வைக்கப்பட்டு அதன் பிறகு முடிவுவரை ஊக்கத்தோடும் பொறுமையோடும் ஓடினாலும், மேலே சொல்லப்பட்ட தவறுதல்களினாலும், சிற்சில சமயங்களில் ஏற்படுகிற பின்வாங்குதல்களினாலும், மறுபடியும் ஒருபோதும் பெறமுடியாத காலத்தையும் சந்தர்ப்பங்களையும் அவைகளினால் இழக்கிறார்கள்.

- Z ’96, 99 (R 1972).

பலவையான நிலம் கேட்கிறவர்களின் வித்தியாசமான வகுப்பைக் குறிக்கிறது. நல்ல நிலம் உண்மையுள்ளவர்களைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தையை புரிந்துக் கொண்டு, அதில் தியானமாயிருந்து அதை இருதயத்தின், மனதின் பரிசுத்தமாக்குதலுக்கு ஊக்கத்தோடு உபயோகிக்கிறார்கள். அதிலுள்ள அவர்களுடைய ஆர்வத்துக்கு சமமாக அவர்கள் கனிக்கொடுக்கிறார்கள். அவர்களுடைய முடிவான நிலை இவ்வழியிலுள்ள அவர்களுடைய ஆர்வத்தைச் சார்ந்திருக்கிறது.

-P ’32, 62.

**ஒத்த வாக்கியங்கள் :-**

ஆதி 26:12; சங் 111:10; ஏசா 55:10,11; மத் 13:3-8,18-23; 25:20-23; லூக் 6:43-45; 19:6-9; யோவா 12:24; 15:5,8,16; 1பேது 1:23; ரோம 6:22; கலா 5:22,23; பிலி 1:11; 4:17; கொலோ 1:6; எபி 12:11; யாக் 3:18.

**கோபுர வாசிப்பு :** Z ’10, 202 (R 4634)

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் எவ்வாறு வசனத்தை உபயோகித்தேன்? எனக்குக் கிடைத்த பலன்கள் எவை?